**கவனிக்க.-** *20.09.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1830 - 2013 සැප්තැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2013.09.27

*1830 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1828 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1843 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## மத்துகம பிரதேச சபை

மேல் மாகாண அரசாங்க சேவை வெற்றிடங்களுக்காக இணைத்துக்கொள்ளல்

மத்துகம பிரதேச சபையில் வெற்றிடங்களாக உள்ள கீழ்காணும் பதவிகளுக்கு தகைமைகளுடைய மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பதவிப் பெயர் | வெற்றிடமாக உள்ள பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் | ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 01 | இலகு வாகன சாரதி II (ஆ) | 02 | PL 3 (2006 A) ரூ. 12,470-130×10-145×10-160×10-170×12-ரூபா 18,860 (ரூ. 12,990 க்கு முன்னர் வினைதிறமைக்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். ஆரம்ப சம்பள அளவு - மாதாந்தம் ரூபா 12,470) | கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் குறைந்தபட்சம் 8 ஆம் தரம்/ ஒன்பதாம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | (i) தனியார்/கூலி வாகனம் மற்றும் வெற்று வாகன நிறை ஹொண்டர் 24 க்கு குறைந்த ஸ்டேசன் வெக்கன் வண்டி ஓட்டுதல் தொடர்பான மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேர்ச்சி பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>(ii) திணைக்களப் பிரதிநிதி ஒருவர், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பரிசோதகர் ஒருவர், பொலிஸ் வாகன போக்குவரத்து பரிசோதகர் ஒருவர் பொலிஸ் வாகன போக்குவரத்துப் பிரிவின் அதிகாரி ஒருவர் உள்ளடங்கும் குழுவொன்றினால் நடாத்தப்படும் வாகனம் ஓட்டுதல் பற்றிய தேர்ச்சி பரிசோதனையில் சித்திபெறுதல் வேண்டும். |
| 02 | இயந்திர செயற்பாட்டாளர் III | 01 | PL 2 (2006 A) ரூ. 12,210-130×10-145×10-160×10-170×12-ரூபா 18,600 (ரூ. 12,600 க்கு முன்னர் வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.) இந்த சம்பள அளவுத்திட்டம் ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை தகவலுக்கும் முரணானது. ஆகையினால் இந்த சம்பள அளவுத்திட்டம் மாற்றியமைக்கப்படுவதற்கு இடமுண்டு. | **உள்ளக விண்ணப்பதாரர்களுக்காக** குறைந்தபட்சம் 8 ஆம் தரம்/ 9 ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>**வெளி விண்ணப்பதாரர்களுக்காக** தேசிய கல்விப் பொது தராதரப் பத்திர (சா. த.) பரீட்சையில் அல்லது கல்விப் பொது தராதரப் பத்திர (சா. த) பரீட்சையில் ஏதாவது இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | (i) வெற்றுவாகன நிறை ஹொண்டர் 34 க்கு கூடுதலான மோட்டார் வாகனம் மற்றும் கனரக டேலர் மற்றும் 32 க்கு கூடுதலான பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப் பத்திரம் உள்ள பஸ் வண்டி ஓட்டுதல் சம்பந்தமான மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேர்ச்சி பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>(ii) குறைந்தபட்ச உயரம் 5 அடி 6 அங்குலமாக இருத்தல் வேண்டும்.<br>(iii) பதவியுடன் தொடர்புடைய கனரக இயந்திரம் செயற்படுத்துதல் சம்பந்தமான அரசாங்க அல்லது அரசாங்கத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருடத்திற்கும் குறையாத தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். (அரசாங்க நிறுவனம், மாகாண அரச நிறுவனம், உள்ளூராட்சி நிறுவனம், அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட தனியார் நிறுவனம், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாகும்.)<br>(iv) மோட்டார் இயந்திரவியல் பற்றிய அடிப்படை அறிவு இருத்தல் வேண்டும். |

| | பதவிப் பெயர் | வெற்றிடமாக உள்ள பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் | ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 03 | தகனபீட செயற்பாட்டாளர் | 01 | PL 2 (2006 A) ரூ. 12,210-130×10-145×10-160×10-170×12-ரூபா 18,600 (வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சையில் நான்காவது சம்பளப் படிமுறை வருவதற்கு முன்னர் சித்தியடைதல் வேண்டும்.) ஆரம்ப சம்பள அளவு ரூபா 12,210 | **உள்ளக விண்ணப்பதாரர்களுக்காக** (அ) குறைந்தபட்சம் 8 ஆம் தரம்/ 9ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மற்றும் பதவியுடன் தொடர்புடையதாக குறைந்த பட்சம் இரண்டு வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (திணைக்களத் தலைவரினால்/ நிறுவனத் தலைவரினால் வழங்கப் பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.) **வெளி விண்ணப்பதாரர்களுக்காக** (ஆ) தேசிய கல்விப் பொது தராதரப் பத்திர (சா. த.) பரீட்சையில் அல்லது கல்விப் பொது தராதரப் பத்திர (சா. த.) பரீட்சையில், ஏதாவது இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மற்றும் பதவியுடன் தொடர்புடையதாக குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் சான்றிதழ் சமர்ப்பிக் கப்படுதல் வேண்டும்.) | |

2. மத்துகம பிரதேச சபையில் ஏற்கனவே அமைய, பதிலீடு அல்லது செயற்றிட்ட அடிப்படையில் சேவை புரியும் விண்ணப்பதாரர்கள் தொடர்பாக முன்னுரிமை வழங்கப்படும்.

3. **வயது**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினம் அன்று வயது 18 வருடங்களுக்கு குறையாதும் 45 வருடங்களுக்கு அதிகரிக்காதும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள ஊழியர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை உரித்தாகாது.)

4. **ஏனைய தகைமைகள்**.-

(i) விண்ணப்பதாரி பரம்பரையாக அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி சிறந்த நற்குணமுடையவராகவும், சிறந்த ஆரோக்கியமுடையவராய் இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு அண்மித்த 03 வருடங்களுக்கு குறையாத காலம் விண்ணப்பதாரி மேல் மாகாணத்தினுள் நிரந்தர வசிப்பிடமுடையவராய் இருத்தல் வேண்டும். (வாக்காளர் பெயர்பட்டியல் மூலம் அல்லது கிராம சேவை உத்தியோகத்தர்/பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் சான்றிதழ் மூலம் நிரூபிக்க வேண்டும்) ;

(iv) அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிறுவனத்தினால் சேவையில் இருந்து நீக்கப்பட்ட ஒருவராக இருத்தலாகாது என்பதுடன் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 44/90 இன் கீழ் ஓய்வுபெற்ற ஒருவராய் இருத்தலாகாது ;

(v) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்ட ஒருவராய் இருத்தலாகாது ;

(vi) தேவைப்படுமானால் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற பிணைக்காக பணம் அல்லது காப்புறுதிச் சான்றிதழ் வைப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

5. **பொது நிபந்தனைகள்**.-

(i) சிறந்த ஆளுமைபடைத்தவராய் இருத்தல் வேண்டும் ;
(ii) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறக்கூடியதுமாகும் ;
(iii) இந்தப் பதவி 3 வருட கால தகுதிகாண் காலத்துக்கு உட்பட்டதாகும் ;
(iv) தகுதிகாண் காலத்தின் இறுதியில் நிரந்தரமாக்குதல் பற்றி கவனத்தில் கொள்ளப்படும் ;
(v) இணைத்துக்கொள்ளப்பட்ட பின்னர் தங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கல்வித்தகைமைகள் அல்லது வேறு தகைமைகள் போலியானது அல்லது உண்மையற்றது என நிரூபிக்கப்பட்டால் வேறு எந்தவொரு அறிவித்தலுமின்றி நியமனம் ரத்து செய்யப்படும்.

6. **மேற்குறித்த பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு முறை**.-

6.1 **சாரதி**.- இலகு வாகன சாரதி II ஆ வகுப்பிற்கு ஆட்சேர்க்கும் முறை.-

6.1.1. திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வாகன பரிசோதகர் ஒருவர், பொலிஸ் வாகன போக்குவரத்து பிரிவின் அதிகாரி ஒருவர் உள்ளடங்கும் குழுவொன்றினால் நடாத்தப்படும் வாகனம் ஓட்டுதல் பற்றிய தேர்ச்சி பரிசோதனையில் சித்திபெறுதல் வேண்டும்.

6.1.2. 24/95 ஐ கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

6.2 **இயந்திர செயற்பாட்டாளர்**.- ஆட்சேர்ப்பு முறை.-

6.2.1. இயந்திர செயற்பாட்டாளர் பதவியுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டிய பொது தகைமைகள் கல்வித் தகைமைகள் மற்றும் தொழில் ரீதியான தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் உள்ள விண்ணப்பதாரிகள் வாய்மூல மற்றும் செய்முறைப் பரீட்சைகளுக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் உட்படுத்தப்பட்டு, அதில் காட்டும் திறமையின் அடிப்படையில் II ஆம் தரத்திற்கு இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

6.3 **தகனபீட செயற்பாட்டாளர்**.- ஆட்சேர்ப்பு முறை.-

6.3.1. மேற்குறிப்பிடப்படும் பொது தகைமைகள் கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் உள்ள விண்ணப்பதாரிகள் அழைக்கப்பட்டு, செய்முறைப் பரீட்சைக்கும், நேர்முகப்பரீட்சைக்கும் உட்படுத்தி, அதில் காட்டும் திறமையின் அடிப்படையில் வெற்றிடங்களுக்காக இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

7. விண்ணப்பதாரிகள் இங்கு தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2013.10.15 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், பிரதேச சபை, மத்துகம" எனும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். தாமதமாக கிடைக்கும் மற்றும் தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்புக்கூறப்படமாட்டாது.

8. தகைமையுடைய விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

9. விண்ணப்பத்துடன் கீழ்க் காணும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் என்பதுடன் நேர்முகப் பரீட்சையின்போது மூலப் பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்விச் சான்றிதழ் ;
(இ) வதிவிடம் தொடர்பான பிரதேச செயலாளர் சான்றிதழ்/வாக்காளர் பெயர்பட்டியலின் பிரதி ;
(ஈ) அண்மையில் பெறப்பட்ட நற்குணம் தொடர்பான இரண்டு சான்றிதழ்கள் (அதில் ஒரு சான்றிதழ் கிராம அலுவலரிடம் இருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.)
(உ) தொழில் ரீதியான அனுபவம் பற்றிய சான்றிதழ்.

10. இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படுகின்ற காலத்தினுள் இந்த ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தல் அல்லது மாற்றியமைத்தல் மற்றும் இந்த அறிவித்தலை இரத்தச் செய்தல் போன்ற அதிகாரங்கள் மத்துகம பிரதேச சபையின் செயலாளருக்கு உரித்தானதாகும் ;

11. ஆட்சேர்ப்பு செய்யப்படும் திகதியன்று காணப்படும் சகல வெற்றிடங்களும், நிரப்பப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதனால் மேற்குறிப்பிடப்படும் பதவிகளின் எண்ணிக்கை மாற்றியமைக்கப்படுவதற்கு இடமுண்டு.

அசோக்க ரணசிங்க,
செயலாளர்,
மத்துகம பிரதேச சபை.

2013, ஓகத்து 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்துகம பிரதேச சபை**

........................................................................ பதவிக்கான விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் :----.
   முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் :----.
2. தபால் விலாசம் :----.
3. பிறந்த திகதி :- ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
4. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று வயது :-
   வருடங்கள் :----, மாதங்கள் : ----, நாட்கள் :----.
5. திருமணமானவர் /திருமணமாகாதவர் :----.
6. இனம் :----.
7. இலங்கை பிரசையா? ஆம் என்றால், பரம்பரையினாலா? பதிவினாலா? :----.
8. கல்வித் தகைமைகள் :----.
9. தொழில் தகைமைகள் :----.
10. நீங்கள் ஏற்கனவே இந்த பிரதேச சபையில் சேவை புரிபவர் என்றால் :----.
    (i) தற்பொழுது வகிக்கும் பதவி :----.
    (ii) இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
    (iii) நிரந்தர/அமைய/தற்காலிக/பதிலீடு/ஒப்பந்தம் என்பது பற்றி :----.

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், பிழையற்றதும் என உறுதிமொழிகிறேன். மேற்குறிப்பிடப்படும் தகவல்கள் பிழையானது என நிரூபிக்கப்பட்டால் நான் சேவையில் இணைத்துக்கொள்ள முன்னர் தகுதியற்றவனாவேன் எனவும் நியமனம் பெற்ற பின்னர் நிரூபிக்கப்பட்டால் எந்தவித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி :----.

9-958

---

**பாலிந்தநுவர பிரதேச சபை**

மேல் மாகாண மாகாண அரசாங்க சேவை சாரதிகள் பதவிக்க ஆட்சேர்த்துக் கொள்ளல்

மேல் மாகாண மாகாண அரசாங்க சேவையின் பாலிந்தநுவர பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள சாரதி பதவியில் ஆட்சேர்த்துக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

| இலக்க விபரம் | தொழில் விபரம் | பதவி எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1. | சாரதி | 01 | ரூபா 12,210 – 10 x 130 – 10 x 145 – 10 x 160 – 12 x 170 - ரூபா 18,600 | (i) உள்ளக விண்ணப்பதாரிகள் : குறைந்தபட்சம் தரம் 9 அல்லது ஆண்டு 8 சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>(ii) வெளிவாரி விண்ணப்பதாரிகள் : குறைந்தது க. பொ. த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

| இலக்க விபரம் | தொழில் விபரம் | பதவி எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | **விண்ணப்பதாரியின் ஏனைய தகைமைகள்**<br>(i) 34 க்கு மேல் பார மோட்டார் ஓட்டுனர், பார டேலர் மற்றும் 32 பேர்களுக்கு மேல் கொண்டு செல்வதற்கான அத்தாட்சிபத்திரம் உள்ள பஸ் ஓட்டுனருக்கான வாகன அதிகாரியினால் வெளியிடப்படும் திறமை குறித்தான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>(ii) குறைந்தது 5 அடி 6 அங்குலம் உயரம் கொண்டவராக இருக்க வேண்டும்.<br>(iii) தேர்ந்தெடுக்க உள்ள வெற்றிடங்களுக்கு இல. 1 இன் கீழ் பார இயந்திர இயக்கவியலாளர் என்று குறிப்பிடப்படல் வேண்டும். |

**2. தேவையான ஏனைய தகைமைகள்.-**

(1) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதிக்கு வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(3) விண்ணப்பதாரிகள் மேல் மாகாணத்தில் குறைந்தது 3 வருடங்கள் நிரந்தர பதிவாளராக இருத்தல் வேண்டும் (வாக்காளர் பட்டியல் அல்லது பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்) ;

(4) பாலிந்தநுவர பிரதேச சபை பிரதேசத்தினுள் வாழும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் ;

(5) சிறந்த நல்லொழுக்கமுள்ளவராகவும் நல்ல உடல் ஆரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும் ;

(6) கடும் தண்டனை அடிப்படையில் நீதிமன்ற குற்றவாளிக்கான தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது ;

(7) அரசாங்க, உள்ளூராட்சி அல்லது திணைக்கள சேவையில் இருந்து நீக்கப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(8) பாலிந்தநுவர பிரதேச சபையில் தற்போது நிரந்தர/தற்காலிக /பதிலீட்டு /கொடுப்பனவு அடிப்படையில் வேலையில் ஈடுபடும் சேவையாளருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் ;

(9) விண்ணப்பதாரர்கள் அந்தந்த சேவைக்கான தகுதிகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் ;

(10) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு முன் 5 வருடக் காலம் பாலிந்தநுவர பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தின் நிரந்தர வதிவிடத்தை கொண்டோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் ;

(11) இச்சேவை தொடர்பான (அரச சேவை) மாகாண அடிப்படையில் சேவை முன் அனுபவம், பயிற்சி பெற்றிருப்பின் அது விஷேட தகுதி எனக் கருதப்படும்.

**3. சேவை நிபந்தனைகள்.-**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியவுரித்துடையதுமாகும் ;

(ii) பதவி மூன்று வருட கால ஒப்பந்தத்தின் அடிப்படையானது ;

(iii) இவ்விண்ணப்பமானது, இலங்கை அரசாங்க நிறுவனங்களின் ஆலோசனைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அரசாங்கத்தினால் அடுத்தடுத்து வெளியிடப்படும் வேறு ஆலோசனைகளுக்கும், கட்டுபாடுகளுக்கும் இணங்கி சேவையாளர்கள் சேவை புரிதல் வேண்டும் ;

4. **விண்ணப்பங்கள் கோரப்படும் முறை**.- (i) அரச திட்டமிடல் புள்ளிவிபர இலக்கம் 15/90 படி எழுத்து மொழியில் அல்லது நேர்முகப்பரீட்சை மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் ;

(ii) விண்ணப்பப்படிவத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டும். நேர்முக பரீட்சையின் போது மூல சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படவும் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) வசிப்பிடத்தை உறுதிசெய்யும் பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
(iv) அண்மையில் பெற்றுக்கொண்ட நன்நடத்தை தொடர்பான சான்றிதழ்கள் இரண்டு ;
(v) தொழில் தொடர்பான அனுபவமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ்.

5. முன் தகுதிபெற்ற விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர்.

6. **விண்ணப்பப்படிவம் அனுப்பும் முறை**.- விண்ணப்பதாரிகள் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து 2013.10.17 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், பாலிந்தநுவர பிரதேச சபை, பாலிந்த நுவர" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் கோரப்படும் போது அல்லது கோரப்பட்ட பின்பு தாமதங்கள் அல்லது மாற்றங்கள் ஏற்படுதல் அல்லது இவ் அறிவித்தலை தடைசெய்தல் அல்லது மீள் ஆராய்தல் போன்ற எல்லா அதிகாரங்களும் பாலிந்தநுவர பிரதேச சபை செயலாளருடையது.

ஏ. என். பெலவத்த,
செயலாளர்,
பாலிந்தநுவர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பாலிந்தநுவர பிரதேச சபை,
2013, புரட்டாதி 6.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பாலிந்தநுவர பிரதேச சபை**

மேல் மாகாண மாகாண அரசாங்க சேவையின் ................. பதவி

1. முதலெழுத்துடன் பெயர் :-----.
   முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் :-----.
2. நிரந்தர பதிவு முகவரி :-----.
3. நிரந்தர முகவரி :-----.
4. விவாகமானவரா?/ஆகாதவரா? :-----.
5. பால் (ஆண்/பெண்) :-----.
6. பிறந்த திகதி : - ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
7. நீர் பிறப்பினால் இலங்கை பிரசையா/பதிவின் மூலமா? : -----.
   கல்வித் தகைமைகள் : - க. பொ. த. (சா. த.) பரீட்சை சித்தியடைந்த ஆண்டும் சுட்டிலக்கமும் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |

ஏனைய தகைமைகள் :

9. தொழிற் தகைமைகள் :-----.

10. சேவை அனுபவம் :-----.

(i) தற்போது சேவையாற்றும் நிறுவனம் :-----.

(ii) தற்போது வகிக்கும் பதவி :----.

(iii) அப்பதவியில் நியமிக்கப்பட்ட திகதி :----.

(iv) முன்னர் சேவையாற்றிய நிறுவனத்தில் வகித்த பதவி :----.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**தற்போது அரச சேவையில் இருப்போருக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி ............................................... இந்நிறுவனத்தில் ............................ ஆக சேவையாற்றுகிறாரெனவும் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் நீதிக்கு புறம்பாக எவ்வித குற்றமும் புரியவில்லை எனவும் உறுதிப்படுத்துவதோடு இவ்விண்ணப்பத்தை சிபாரிசு செய்கிறேன்.

-----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : -----.
பதவிப் பெயர் : -----.
திணைக்களம்/ நிறுவனம் : -----.

9-1105

---

**ஜா-எல பிரதேச சபை-கந்தானை**

மேல் மாகாண மாகாண அரசாங்க சேவையில் ஜா- எல பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பதவிகளுக்காக ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு ஆகக்குறைந்த தகைமைகளுள்ள மேல் மாகாணத்திற்குள் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவி பெயர் | பதவி எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1. | இயந்திர தொழில்நுட்ப வியலர் (தொழில் நுட்ப வியலர் தரம் III) | 02 | எம்என் 1- 2006ஏ ரூபா 12, 470- 10X 130- 10 X 145 - 10X 160 - 12X 170 - ரூபா 18,860.<br><br>4 ஆம் படி நிலைக்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை உண்டு. | தேசிய கல்விப் பொது தராதரப்பத்திரப் பரீட்சையில் அல்லது க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஏதேனும் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் (இவற்றில் 05 பாடங்கள் ஒரே தடவையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.)<br><br>மற்றும்<br><br>பெற்றோல், டீசல் வாகனங்களின் இயந்திர பாகங்களின் பிழைகளைத் திருத்துதல், இயந்திர பாகங்களை திருத்துதல் மற்றும் வாகனங்களை திருத்தும் எல்லா அலுவல்களிலும் பராமரித்தலும் உரித்தான துறையில் இரண்டு வருட அனுபவம் இருத்தல். (அரசில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.)<br><br>தொழில்சார் தகைமைகள் :<br>வாழ்க்கைத்தொழிலுக்குரிய தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமைகள் (NVQ) 3 ஆம் மட்ட சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>அல்லது |

| தொடர் இல. | பதவி பெயர் | பதவி எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|

தொழில்நுட்ப கல்வி பயிற்சி திணைக்களத்தில் (DTET) தொழிலுக்குரித்தான துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத பாட நெறி சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

தேசிய இளைஞர் சேவை சபையில் (NYSC) தொழிலுக் குரித்தான துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறி சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் (VTA) தொழிலுக்குரித்தான துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறி சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

தேசிய பயிற்சி, தொழில்நுட்ப பயிற்சி திணைக்கத்தில் (NAITA) தொழிலுக்குரித்தான துறையில் ஒரு வருடத் திற்குக் குறையாத பாட நெறி சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் தொழிலுக்குரித்தான துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறி பூர்த்தி செய்த சான்றிதழ் பெற்றிருத்தல்.

இதற்காக ஆட்சேர்த்துக்கொள்வதற்கு பின்வரும் எழுத்துமூல மற்றும் செயன்முறை பரீட்சையின் பெறுபேறுகள் மீதாகும் :-

**எழுத்துமுலப் பரீட்சை** :

பதவிக்குரியதான கடமைகள் பற்றிய நியாயமான அறிவு பரீட்சிக்கப்படும். இவ்வினாப்பத்திரம் ஒரு மணித்தியால வினாப்பத்திரமாகும். ஆகக்கூடிய புள்ளி 100.

**செயன்முறைப் பரீட்சை**

பதவிக்குரியதான கடமைகளை நிறைவேற்றக்கூடிய தன்மை பற்றிய செயன்முறை பரீட்சிக்கப்படும்.

இங்கு பதவிக்கு உரித்தான செயற்பாடுகள் பற்றி கட்டமைப்பு பரீட்சை சபையினால் வாய்மொழிமூலம் வினாக்கள் வினவப்படும். (இயந்திரத்தை இயக்குதல், இயந்திரத்தின் ஒரு பாகத்தை கழற்றி பொருத்துதல் தொழிலுக்குரித்தாக அளிக்கப்பட்டுள்ள அலுவல்கள் தொடர்பாக செயன்முறை பரீட்சையின் பகுதி பரீட்சை சபையினால் வாய்மொழிமூலம் வினவப்படும். (காலம்: 1/ 2 மணித்தியாலயம் ; புள்ளி - 100).

(ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை பெறுதல் வேண்டும்.)

| தொடர் இல. | பதவி பெயர் | பதவி எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 2. | மின்சார கம்பி சுற்றுபவர் | 01 | பீஎல் 2- 2006ஏ<br>ரூபா 12, 470- 10X 130- 10 X 145 - 10X 160 - 12X 170 - ரூபா 18,860.<br><br>4 ஆம் படி நிலைக்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை உண்டு. | தேசிய கல்விப் பொது தராதரப்பத்திரப் பரீட்சையில் அல்லது க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஏதேனும் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் (இவற்றில் 05 பாடங்கள் ஒரே தடவை சித்திபெற்றிருத்தல் வேண்டும்.)<br><br>மற்றும்<br><br>மின்சார கம்பி இழுத்தல், வீதி விளக்குகள் பொருத்துதல் மற்றும் திருத்துதல், மின் உபகரணங்கள் மற்றும் மின் உதிரிப் பாகங்களை பராமரித்தல், எல்லா மின் நிலைய நிறுவல் அலுவல்கள், மின் விநியோகித்தல், மின் சேவையை நடாத்துதல் ஆகிய அலுவல்களுக்கு உரித்தான துறையில் இரண்டு வருட அனுபவம் இருத்தல். (அரசில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>**தொழில்சார் தகைமைகள் :**<br><br>வாழ்க்கைத்தொழிலுக்குரிய தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமைகள் (NVQ) 3 ஆம் மட்ட சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>தொழில்நுட்ப கல்வி பயிற்சி திணைக்களத்தில் (DTET) தொழிலுக்குரித்தான துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத பாட நெறி சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>தேசிய இளைஞர் சேவை சபையில் (NYSC) தொழிலுக்குரித்தான துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறி சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>இலங்கை வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் (VTA) தொழிலுக்குரித்தான துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறி சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>தேசிய பயிற்சி, தொழில்நுட்ப பயிற்சி திணைக்கத்தில் (NAITA) தொழிலுக்குரித்தான துறையில் ஒரு வருடத் திற்குக் குறையாத பாட நெறி சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் தொழிலுக்குரித்தான துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறி பூர்த்தி செய்த சான்றிதழ் பெற்றிருத்தல். |

| தொடர் இல. | பதவி பெயர் | பதவி எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | இதற்காக ஆட்சேர்த்துக்கொள்வதற்கு பின்வரும் எழுத்து மூல மற்றும் செயன்முறை பரீட்சையின் பெறுபேறுகள் மீதாகும் :-<br><br>**எழுத்துமூலப் பரீட்சை** :<br><br>பதவிக்குரியதான கடமைகள் பற்றிய நியாயமான அறிவு பரீட்சிக்கப்படும். இவ்வினாப்பத்திரம் 40 பல்வகை வினாக்களைக் கொண்ட ஒரு மணித்தியால வினாப் பத்திரமாகும். ஆகக்கூடிய புள்ளி 100.<br><br>**செயன்முறைப் பரீட்சை**<br><br>பதவிக்குரியதான கடமைகளை நிறைவேற்றக்கூடிய தன்மை பற்றிய செயன்முறை பரீட்சிக்கப்படும்.<br><br>இங்கு மின்சார கம்பி இழுத்தல், வீதி விளக்குகள் பொருத்துதல் மற்றும் திருத்துதல், மின் உபகரணங்கள் மற்றும் மின் உதிரிப்பாகங்களை பராமரித்தல், எல்லா மின் நிலைய நிறுவல் அலுவல்கள், மின் விநியோகித்தல், மின் சேவையை நடாத்துதல் ஆகிய அலுவல்களுக்கு உரித்தான செயற்பாடுகள் பற்றி பரீட்சை சபையினால் வாய்மொழி மூலம் வினாக்கள் வினவப்படும். (காலம் : 1/ 2 மணித்தியாலயம் ; புள்ளிகள் - 100).<br><br>(ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை பெறுதல் வேண்டும்.) |
| 3. | சாரதிகள் II "ஆ" | 09 | பீஎல் 2- 2006ஏ<br>ரூபா 12, 470- 10X 130- 10 X 145 - 10X 160 - 12X 170 - ரூபா 18,860.<br><br>4 ஆம் படிநிலையிற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை உண்டு. | கல்வி பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாட சாலையில் ஆகக்குறைந்தது 8 ஆந் தரத்தில் சித்தி பெற்றிருத் தல் வேண்டும்.<br><br>**தொழில்சார் தகைமைகள்** :<br>பிரத்தியேக வாகனம் மற்றும் நிகர நிறை 24 அந்தரிற்கு குறைந்த பார மோட்டார் வாகனங்கள் செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் விநியோகிக் கப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பாரமற்ற வாகனங்கள் செலுத்துவதில் ஆகக்குறைந்தது 3 வருட அனுபவமிருத்தல் வேண்டும்.<br><br>**ஏனைய தகைமைகள்** :<br><br>சாரதியாக 3 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ்மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.) |

| தொடர் இல. | பதவி | பதவி எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | குறைந்தது 5 அடி உயரம் இருத்தல் வேண்டும். இரவு மற்றும் பகல் காலங்களில் சேவையாற்றக்கூடிய நல்ல உடல் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டியதுடன் நல்ல கண்பார்வை உடையவராக இருத்தலும் வேண்டும். பெருவீதிகள் பற்றிய நல்லறிவு இருத்தல் வேண்டும்.<br><br>திணைக்களத்தின் பிரதிநிதியொருவர், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் வண்டி பரீட்சிப்பவர், பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் அலுவலரொருவர் அடங்கிய சபையினால் நடாத்தப்படும் சாரதி பயிற்சி நிபுணத்துவத்தை மதிப்பிடும் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். |
| 4. | வீதி ஊழியர் (அ. அ. உ. III) | 01 | பீஎல் 2- 2006ஏ ரூபா 11, 730- 10X 120- 10 X 130 - 10X 145 - 12X 160 - ரூபா 17,600.<br><br>4 ஆம் படிநிலையிற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை உண்டு. | ஆகக்குறைந்தது 8 ஆந் தரத்தில் /ஆண்டு 9 இல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |
| 5. | சுகாதார ஊழியர் (அ. அ. உ. III) | 04 | பீஎல் 1- 2006ஏ ரூபா 11, 730- 10X 120- 10 X 130 - 10X 145 - 12X 160 - ரூபா 17,600.<br><br>4 ஆம் படிநிலையிற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை உண்டு. | கல்வித் தகைமை கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. |

*2.* ***குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான பொது நிபந்தனைகள்*** .- (i) விண்ணப்பங்கள் கோரப்படும் வேளையில் விண்ணப்பதாரிகள் மேல் மாகாணத்தில் ஆகக்குறைந்தது மூன்று வருட நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.

(i) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியருக்கு இவ்வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

(iii) விண்ணப்பதாரரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(iv) விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியமுடையவராகவுமிருத்தல் வேண்டும்.

(v) தண்டச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது அல்லது அரசாங்க/உள்ளூராட்சி அல்லது கூட்டுத்தாபன சேவையிலிருந்து விலக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

*3.* ***ஆட்சேர்ப்பு செய்யும் விதம் மற்றும் விண்ணப்பிக்கும் விதம்***.- (i) சேவை தேவைப்பாடுகளுக்கேற்ப பரீட்சை பெறுபேறுகள் மீது/ சட்டப்படியான நேர்முகப்பரீட்சை மற்றும் செயன்முறை பரீட்சையின்மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(ii) விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து 17.10.2013 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், ஜா- எல பிரதேச சபை, கந்தானை" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (ஏலவே அரசாங்க சேவை மற்றும் மாகாண அரசாங்க சேவையில் உள்ளோர் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

(iii) விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பத்தை தாங்கியுள்ள கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எழுதுதல் வேண்டும்.

(iv) தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர் அத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) தேசிய அடையாள அட்டை ;
(4) நிரந்தர வதிவை நிரூபிக்கும் பிரதேச செயலாளரினால் சான்றுபடுத்தப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ் ;
(5) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் இரண்டு (இதில் ஒன்று பிரதேசத்தின் கிராம அலுவலரிடம் பெற்றதாக இருத்தல் வேண்டும். அது பிரதேச செயலாளரினால் சுருக்கெழுத்தொப்பம் இடப்படல் வேண்டும்.)
(6) தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ்.

4. **சேவை நியதிகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

5. இவ்விண்ணப்பங்களை கோரிய பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் இவ்வாட்சேர்ப்புக்களை தாமதித்தல் அல்லது மாற்றஞ் செய்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச் செய்தல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் ஜா-எல பிரதேச சபை செயலாளருக்கே உரித்தானதாகும்.

6. ஆகக்குறைந்த தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் எழுத்துமூல பரீட்சை/செயன்முறை பரீட்சை/நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(தமிழ் , ஆங்கில மொழிபெயர்புகளில் உரைகளில் ஏதேனும் பேதமிருப்பின் சிங்கள மொழி உரையே மேலோங்கும் என்பதை கவனத்திற் கொள்க.)

எல். ஏ. எம். சமந்தி,
செயலாளர்,
ஜா-எல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கந்தானை,
ஜா- எல,
2013, மாச்சு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஜா- எல பிரதேச சபை**

................ பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-----.
3. நிரந்தர முகவரி :-----.
4. நிரந்தர மாவட்டம் :-----.
5. பால் (ஆண்/பெண்) :-----.
6. பிறந்த திகதி : ஆண்டு :-----. மாதம் :---- திகதி :-----.
7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியன்று வயது : வருடங்கள்.............. மாதங்கள் ...................... நாட்கள்............
8. இலங்கை பிரசையாவது பதிவின் மூலமா? பரம்பரையாகவா ? : -----.
9. விவாகமானவரா? விகாகமாகாதவரா ? : ----.
10. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
11. தொலைபேசி இலக்கம் :----.

12. கல்வித் தகைமைகள் :----.

(சான்றிதழ்களை இணைக்கவும்)

13. தொழில்சார் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :-----.

(சான்றிதழ்களை இணைக்கவும்).

14. சேவை அனுபவம் :----.

15. நீதிமன்றில் ஏதேனும் குற்றத்திற்காக எப்போதாவது தண்டிக்கப்பட்டுள்ளீராயின் தண்டனை பற்றிய விபரம் :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், பிழையற்றதும் என உறுதியுரைக்கிறேன், இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள பொய்யான தகவல்கள் நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு உட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

9-1198

---

**மீரிகம பிரதேச சபை**

மேல் மாகாண மாகாண அரசாங்க சேவையில் வெற்றிடங்களை நிரப்புதல்

மேல் மாகாண மாகாண அரசாங்க சேவையில் மீரிகம பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக உரித்துடைய தகைமைகள் பெற்ற மேல் மாகாணத்தில் வதியும் ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து கல்விச் சான்றிதழ்கள், தொழிற் தகைமைச் சான்றிதழ்கள், வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் "செயலாளர், மீரிகம பிரதேச சபை" என்ற முகவரிக்கு 2013.10.15 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "..................... (உரித்துடைய)............." பதவிக்கான விண்ணப்பம் " என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். பூர்த்தி செய்யப்படாத மற்றும் உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஏற்கனவே அரசாங்க/ உள்ளூராட்சி நிறுவனங்களில் சேவையில் உள்ள விண்ணப்பதார்கள் திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிட எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் (மாதாந்தம்) | கல்வித்தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | கைத்தொழில் நிர்வாகி | | 13,120-10×145-11×170-10×240-10×320- 22040 நான்காவது படி நிலைக்கு வரு முன் னர் வினைத்திறமை காண் தடையுண்டு. | (அ) சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ் பரீட்சையில் அல்லது க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தவணைகளில் எண் கணிதம்/கணிதம், வர்த்தக கணிதம்/ தூய கணிதம் மற்றும் சிங்கம்/தமிழ் மொழி உட்பட்டதாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>அல்லது<br>(ஆ) தேசிய கல்விப் பொதுத் தராதரப் பத்திர பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம்/சிங்களம்/தமிழ் மொழி உட்பட்டதாக 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>அல்லது<br>(இ) உள்ளூராட்சி நிறுவனமொன்றில் 10 வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலம் பூர்த்தி செய்திருப்பின் 8 ஆம் வகுப்பு சித்தியடைந் திருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிட எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் (மாதாந்தம்) | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 02 | சுகாதார நிர்வாகி | 01 | 13,120-10×145-11×170-10×240-10×320-22,040 நான்காவது படி நிலைக்கு வருமுன்னர் வினைத்திறமை காண் தடையுண்டு. | (அ) சிங்களம்/தமிழ் மற்றும் கணிதம்/எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/சுகாதாரமும் சரீர சாஸ்திரமும்/சுகாதார விஞ்ஞானம்/விஞ்ஞானம் உட்பட்டதாக ஆகக்குறைந்தது 05 விடயங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தவணைகளில் 6 பாடங்களில் க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்<br>அல்லது<br>(ஆ) சிங்களம்/தமிழ் மற்றும் கணிதம்/எண்கணிதம்/வர்த்தக எண் கணிதம்/ சுகாதாரமும் சரீர சாஸ்திரமும்/ சுகாதார விஞ்ஞானம்/விஞ்ஞானம் உட்பட்டதாக ஆகக் குறைந்தது 5 விடயங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தவணைகளில் 6 பாடங்களில் க. பொ. த. (சா/த.) பரீட்சையில் சித்தியடைந்துள்ள உள்ளூராட்சி நிறுவன மொன்றில் நிரந்தர பதவியொன்றை வகிப்பவரொருவராக இருத்தல்.<br>அல்லது<br>(இ) உள்ளூராட்சி நிறுவனமொன்றில் 10 வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பின் 8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல். |
| 03 | கெப் வாகனச் சாரதி (சாரதி II ஆ) | 01 | ரூபா 12,470-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,860 நான்காவது படி நிலைக்கு வருமுன்னர் வினைத்திறமை காண் தடையுண்டு. | குறிப்பு இலக்கம் 01 ஐப் பார்க்கவும். |
| 04 | நூலக உதவியாளர் (அலுவலக சிற்றூழியர் சேவை II ஆ) | 02 | ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,600 நான்காவது படி நிலைக்கு வரு முன்னர் வினைத்திறமை காண் தடையுண்டு. | க.பொ. த. (சா/த.) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். |

**குறிப்பு இல. 01**

1. சாரதிப் பதவிக்காகப் பூர்த்தி செய்யப்படவேண்டிய கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் .

(i) ஆகக்குறைந்தது 8 ஆம் தரம்/9 ஆம் ஆண்டு சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(ii) தனியார்/வாடகை வாகனம் மற்றும் மொத்த நிறை 24 அந்தருக்குக் குறைந்த ஸ்டேசன் வகன் வாகனம் செலுத்தல் பற்றிய மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட நிபுணத்துவம் பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) வாகனச் சாரதியாக 03 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்).

(iv) ஆகக்குறைந்த உயரம் 5 அடியாக இருத்தல் வேண்டும்.

(v) பகல் நேரத்திலும் மற்றும் இரவு நேரத்திலும் சேவையில் இருத்துவதற்காக உடல் ரீதியாக தகுந்த நிலைமையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த கண் பார்வையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(vi) நெடுஞ்சாலைகள் சட்ட விதிக்கோவை பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும்.

**2. ஏனைய நிபந்தனைகள் :**

(அ) சுகாதார நிர்வாகி மற்றும் சிறு நிர்வாகி ஆகிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் போது விண்ணப்பதாரிகளின் பொது விவேகத்தை பரிசோதிப்பதற்கான 1 1/2 மணித்தியால வினாத்தாளொன்றுக்கும் மற்றும் பொது அறிவைப் பரிசோதிப்பதற்கான 01 மணித்தியாலய வினாத்தாளொன்றுக்கும் தோற்றி அவற்றில் சித்தி பெறுதல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள் :**

(அ) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் கொண்டதாகும்.

(ஆ) விதவை/தபுதாரர் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(இ) தெரிவு செய்யப்படுவோர் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர். அந்தக்காலப்பகுதியில் வருகை, வேலைகள் மற்றும் நடத்தை திருப்பதிகரமானதாக இருந்தால் தகுதி காண் கால இறுதியில் சேவை நிரந்தரமாக்கப்படும். ஏற்கனவே அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் உள்ள பதவியொன்றில் நிரந்தரமாக்கப்பட்டவர்கள் 01 வருட காலத்துக்கு பதில் கடமையாற்றும் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(ஈ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும் மற்றும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அரசாங்க அல்லது மாகாண அரசாங்க அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியர் சம்பந்தமாக உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

(உ) விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவு மூலமோ இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ஊ) மிகச் சிறந்த நடத்தை மற்றும் சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(எ) தண்ட சட்டவிதிக் கோவையின் கீழ் நீதிமன்றமொன்றினால் தண்டம் விதிக்கப்பட்டவராக இல்லாதிருத்தல்.

(ஏ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியாகும் போது கிட்டிய அண்மையில் 3 வருட காலம் மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.

(ஐ) அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டவராக இல்லாதிருத்தல் வேண்டும் என்பதுடன் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 44/90 இன் கீழ் ஓய்வுபெற்றவராக இல்லாதிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை :**

(அ) இந்தப் பதவிகளுக்காகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசோதிக்கப்பட்டு தகுதி பெறும் விண்ணப்பதார்கள் பொது நிர்வாக சுற்றறிக்கை 24/95 க்கு அமைவாக நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்பட்டு தெரிவு செய்யப்படுவர்.

(ஆ) எழுத்துமூல மற்றும் பிரயோக பரீட்சைகளில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை அடிப்படையில் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

கவனிக்கவும் :

மீரிகம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வதிவாளருக்கு கூடுதலான கவனம் செலுத்தப்படும். இந்த ஆட்சேர்ப்பு பற்றிய இறுதித் தீர்மானம் மீரிகம பிரதேச சபைக்கு உரித்துடையதாகும் என்பதைத் தயவு செய்து கவனிக்கவும்.

கே. ஜயதிலக,
செயலாளர்,
மீரிகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீரிகம,
2013, செத்தெம்பர் 11.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மீரிகம பிரதேச சபை**

மேல் மாகாண மாகாண அரசாங்க சேவையின் ........................................... பதவிக்காக ஆட்சேர்ப்பு

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் :-----.
2. நிரந்தர முகவரி :-----.
3. நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
5. பிறந்த திகதி : ----. ஆண்டு:----. மாதம் :----. திகதி :----.
6. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு வயது :----. வருடங்கள் :---- மாதங்கள் :----. நாட்கள் :----.
7. பால் : ஆணா/பெண்ணா :-----. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

8. இலங்கைப் பிரஜையானது பிறப்பாலா அல்லது பதிவு செய்வதன் மூலமா என்பது :----.

9. கல்வித் தகைமைகள் :-----. (சான்றிதழ்களின் பிரதிகள்இணைக்கப்பட வேண்டும்).
படித்த பாடசாலை :----.
சித்திபெற்ற உயர் பரீட்சை :----.

10. I. ஏனைய தகைமைகள் :-----.
II. தொழிற் தகமைகள் :-----.
III. சேவை அனுபவம் :----.

11. நீங்கள் ஏற்கனவே இந்தப் பிரதேச சபையில் சேவை செய்பவராயின் அந்த சேவைக் காலம் பற்றிய விவரங்கள் :----.
அந்த நியமனத்தின் தன்மை - நிரந்தர/அமைய/தற்காலிக.

12. நீங்கள் எப்போதாவது குற்றமொன்றுக்காக நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக ஆக்கப்பட்டுள்ளீரா?----.

இங்கு என்னால் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என இத்தால் உறுதிப்படுத்து கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பொய்யானதும் பிழையானதும் என இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவந்தால் நான் தகுதியற்றவனாவேன் என்பதும், நியமனம் கிடைத்த பின்னர் அவ்வாறான விடயமொன்று நிரூபிக்கப்பட்டால் எந்தவொரு நட்டஈடும் செலுத்தாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உள்ளாவேன் என்பதனையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரியாகிய திரு./திருமதி/செல்வி .............................................. இந்த நிறுவனத்தில் .......................................... ஆக சேயைாற்றுகிறார். அவர்/அவள் எந்தவொரு விதத்திலும் சட்டரீதியான தண்டனைக்கு உட்படாதவர் என்பதனை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன் என்பதுடன் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

-----,
நிறுவனத் தலைவர்.

கையொப்பம் :-----.
பெயர் :-----.
பதவி :-----.
திகதி :-----.

9-1202

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**வெலிகேபொல பிரதேச சபை**

சிபாரிசு செய்யப்பட்ட இடை நியதிச்சட்டம்

வெலிகேபொல பிரதேச சபை 261 ஆவது அதிகார சபை இலக்கம் 1952 ஆவது மாகாண மாநகராட்சி நிறுவன (சிபாரிசு செய்யப்பட்ட இடை நியதிச்சட்டம்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி வெலிகேபொல நகரசபை/நகரசபை பிரதேச சபையினால் 2013, பெப்புருவரி 22 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபை பொதுக்கூட்டத்தின் கீழ் உப அறிக்கையில் குறிப்பிடப்படும் இலக்கம் 6 : 01 இன் படி ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளதை இதன் மூலம் அறிவிக்கிறோம்.

கெலும் பிரியங்கர ஜயசிங்க,
தலைவர்,
வெலிகேபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வெலிகேபொல,
2013.02.28 ஆந் திகதி.

**உப அறிக்கை**

*"1989 ஆம் ஆண்டின் 12 ஆவது மாகாண சபை (நியதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (II) ஆவது உப பிரிவின் (அ) வசனத்தில் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 261 ஆவது அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க மாகாண ஆட்சி நிறுவன சிபாரிசு செய்யப்பட்ட (இடை நியதிச்சட்டம்) சட்டத்தின் 2 ஆவது பிரிவில் (1) ஆவது உப பிரிவின் கீழ் சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் மாகாண ஆட்சி விடய பொறுப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி உருவாக்கப்பட்ட 2011.01.28 ஆந் திகதிய 1961 ஆவது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமான பத்திரிகையின் (ஆ) பிரிவின் வெளியிடப்பட்ட சபரகமுவ மாகாண சபையினால் அங்கீகாரம் செய்யப்பட்டு 2012.03.30 ஆந் திகதி இலக்கம் 1752 ஆவது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமான பத்திரிகையின் (அ) பிரிவில் வெளியிடப்பட்ட சபரகமுவ மாகாணத்தின் மாநகரசபை/நகர சபை/பிரதேச சபைகளினால் ஈக்கள்/நுளம்புகள் மற்றும் நோய்கள் சம்பந்தப்பட்ட கிருமிகள் அழித்தல் சம்பந்தப்பட்ட இடை நியதிச்சட்டம் இந்த ஆலோசனையை வர்த்தமான பத்திரிகையில் வெளியிடும் நாள் தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கு, ஏற்றுக்கொள்ளுவதற்கு மேல் மாகாண சபை நிறுவனங்கள் சிபாரிசு செய்யப்பட்ட சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வெலிகேபொல மாநகர சபை/பிரதேச சபை ஆலோசனை செய்கிறது.*

*09-1096*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.